இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
ஞாயிற்றுக்கிழமை 15-09-2024

# முதலீடுகளின் முதல்வரே வருக! வருக!!



**அனைத்துத் துறைகளிலும் தமிழ்நாட்டை முன்னணி மாநிலமாகக் கொண்டு செலுத்திவரும் ‘திராவிட மாடல்’ ஆட்சியின் முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள், ‘முதலீடுகளிலும் முதல்வரே’ என்ற பெருமையோடு அமெரிக்கப் பயணத்தை முடித்துக் கொண்டு இன்று காலையில் தமிழ்நாடு திரும்புகிறார்கள்!**

‘முதலீடுகளின் முதல்வரே வருக! வருக!!’ என்று தமிழ்நாடு வரவேற்கிறது!

தினந்தோறும் புதிய புதிய திட்டங்கள் தீட்டி தமிழ்நாட்டின் ஒவ்வொரு விடியலையும் மறக்க முடியாத விடியலாக மாற்றிக் கொண்டிருப்பவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். வாக்களித்தவர்க்கு மட்டுமல்ல, வாக்களிக்க மறந்தவர்களுக்கும் சேர்த்து முதலமைச்சராகச் செயல்படுபவர் மட்டுமல்ல, ‘தமிழ்நாட்டின் ஒவ்வொரு மனிதனின் கவலையையும் தீர்க்கும் அரசாக எனது அரசு இருக்கும்’ என்று சொல்லிச் செயல்பட்டு வருபவர் நம்முடைய முதலமைச்சர் அவர்கள். அதனால்தான், அவரது ஒவ்வொரு அசைவையும் அடுத்தடுத்த மாநிலங்கள் உன்னிப்பாக கவனித்து வருகின்றன.

வளர்ச்சிப் பாதையில் செல்லும் தமிழ்நாட்டைப் பின்பற்றி மற்ற மாநிலங்கள் தங்களைத் தகவமைத்துக் கொள்வதைப் பார்க்கிறோம். மற்ற மாநிலங்களில் இருந்து அமைச்சர்களும், அதிகாரிகளும் இங்கு வந்து திட்டப்பணிகளைப் பார்த்துச் செல்லும் காட்சிகளைக் கண்டு வருகிறோம். அந்த வகையில் தமிழ்நாட்டை முன்னேற்றும், இந்தியாவுக்கு முன்மாதிரியான ஆட்சியைக் கொடுத்து வருகிறார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

ஒன்றிய அரசு கணிக்கும் அத்தனை வளர்ச்சிக் குறியீடுகளிலும் ஒருசேர முன்னணி மாநிலமாகத் தமிழ்நாட்டை நிலைநிறுத்திக் காட்டுவது என்பது சாதாரணச் செயல் அல்ல. அசாத்தியமானவர்களால் செய்யப்படும், மாபெரும் செயல் ஆகும்.

**அந்த வரிசையில் தொழில்துறை வளர்ச்சியானது, இந்தியாவின் முதன்மை மாநிலமாகத் தமிழ்நாட்டை கொண்டு செலுத்திக் கொண்டிருக்கிறது. இந்த மூன்றாண்டு காலத்தில் மட்டும் இதுவரை 872 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி உள்ளன. இதன் மொத்த மதிப்பு 9 லட்சத்து 99 ஆயிரத்து 93 கோடி ரூபாய் ஆகும். இவற்றின் மூலமாக 18 லட்சத்து 89 ஆயிரத்து 234 நபர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். இதில் 234 திட்டங்கள் உற்பத்தியைத் தொடங்கி விட்டது. 4 லட்சத்து 16 ஆயிரத்து 717 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைத்து விட்டது. மற்ற ஒப்பந்தங்களும் படிப்படியாக செயல்பாட்டுக்கு வரும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உறுதி அளித்துள்ளார்கள்.**

இதன் தொடர்ச்சியாகத்தான் அமெரிக்கப் பயணத்தை கடந்த மாதம் ஆகஸ்ட் 28 ஆம் தேதி மேற்கொண்டார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். உலகப் புகழ் பெற்ற 25 முன்னணி நிறுவனங்களோடு முதலமைச்சர் அவர்கள் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். இதில் 19 நிறுவனங்களுடன் ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி இருக்கிறது. இதுவல்லவா மகத்தான சாதனை!

உலகின் புகழ்பெற்ற நிறுவனங்களை ‘ஃபார்ச்சூன் 500’ என்று வகைப்படுத்துவார்கள். அதாவது உலகில் உள்ள 500 மிகப்பெரிய நிறுவனங்களின் தர வரிசைப்பட்டியல் அது. அதில் இருக்கும் 19 நிறுவனங்களிடம் இருந்து முதலீடுகளை ஈர்த்து வருகிறார் முதலமைச்சர் அவர்கள்.

சான்பிரான்சிஸ்கோ மற்றும் சிகாகோ நகரில் நடத்தப்பட்ட சந்திப்புகளின் பலனாக, 7,616 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 11,516 நபர்களுக்கு வேலை வாய்ப்பு என்ற வகையில் முதலமைச்சரின் சாதனை அமைந்துள்ளது.

ஜாபில் நிறுவனம் திருச்சி மாவட்டத்திலும், இன்பிங்ஸ் ஹெல்த்கேர் நிறுவனம் மதுரை மாவட்டத்திலும், ஈல்ட்டு இன்ஜினியரிங் சிஸ்டம்ஸ் நிறுவனம் கோயம்புத்தூர் மாவட்டத்திலும் தங்கள் திட்டங்களை நிறுவ புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொண்டுள்ளது.

**உலகின் முன்னணி நிறுவனங்களாக விளங்கும் கூகுள், மைக்ரோசிப், பேபால், நோக்கியா, கேட்டர்பில்லர், அப்ளைடு மெட்டீரியல்ஸ், ஈட்டன், அஷ்யூரன்ஸ், ராக்வெல் போன்ற நிறுவனங்களுடனும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கூகுள் நிறுவனம் ‘நான் முதல்வன்’ திட்டத்துக்கு உதவ இருக்கிறது.**

காலணிப் பொருட்கள் துறையில் முன்னணி நிறுவனங்களில் ஒன்றான ‘நைக்’ நிறுவனம், புகழ்பெற்ற நிறுவனங்களான ஆப்பிள், லிங்க்ட்இன் ஆகிய நிறுவன அதிபர்களை தமிழ்நாட்டில் தொழில் முதலீடுகளை மேற்கொள்ள அழைப்பு விடுத்துள்ளார். ஆட்டோடெஸ்க் நிறுவனம், நமது சிறுகுறு நிறுவன வளர்ச்சிக்கு உதவ உள்ளது.

அந்த வகையில் உலக முதலீட்டாளர்கள் விரும்பும் மாநிலமாக தமிழ்நாடு உயர்ந்துள்ளது. உயர்த்திக் காட்டி விட்டார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

இத்தனை நிறுவனங்கள் வருகின்றன என்றால், இவை அனைத்தும் தமிழ்நாடு முதலமைச்சர் மீது நம்பிக்கை வைத்து வருகின்றன. முந்தைய ஆட்சியில், இங்கு தொழில் தொடங்க வந்தவர்கள், வந்த வேகத்தில் பக்கத்து மாநிலத்துக்குப் போனார்கள். இப்போது பக்கத்து மாநிலத்தில் தொழில் தொடங்க நினைத்தவர்கள், தமிழ்நாட்டை நோக்கி வருகிறார்கள். அதுதான் இதில் இருந்து உணர வேண்டிய முதல் செய்தி ஆகும்.

இந்நிறுவனங்களின் மூலமாக தமிழ்நாடு வளர்கிறது என்பது இரண்டாவது செய்தி.

இந்நிறுவனங்களின் மூலமாக தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு பல்லாயிரக்கணக்கான வேலைவாய்ப்புகள் உருவாக்கித் தரப்படுகிறது என்பது மூன்றாவது செய்தி.

**திராவிட ‘முன்னேற்றக்’ கழகம் என்ற சொல்லில் இருக்கும் முன்னேற்றத்துக்கு எடுத்துக்காட்டாக ‘திராவிட மாடல்’ ஆட்சி நடத்தி வரும் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களே, வருக! வருக!! வருகவே!!!**

# ‘Goodbye, USA’ - முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிவு!



அமெரிக்கப் பயணத்தை நேற்று நிறைவு செய்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "Goodbye, USA" என தனது சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

17 நாள் பயணமாக கடந்த 27ஆம் தேதி அமெரிக்கா சென்ற முதல்வர் அவர்கள் பல்வேறு தொழில் நிறுவனங்களுடன் 7,616 கோடி முதலீட்டுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டார். மேலும், அங்குள்ள தமிழர்களைச் சந்தித்து சிறப்புரை யாற்றினார். அமெரிக்கப் பயணத்தை நிறைவு செய்த அவர், இன்று காலை சென்னை திரும்புகிறார்.

### ரூ.100 கோடியில் – ஓசூரில்

# மேம்படுத்தப்பட்ட மின்னணு, டெலிமாடிக்ஸ் உற்பத்தி நிறுவனம்!

## சிகாகோவில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் ஒப்பந்தம்!

சென்னை, செப்.15-

RGBSI நிறுவனத்துடன் 100 கோடி ரூபாய் முதலீட்டில் ஓசூரில் மேம்பட்ட மின்னணு மற்றும் டெலிமாடிக்ஸ் உற்பத்தி நிறுவனத்தை அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப் பட்டது.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் 12.9.2024 அன்று அமெரிக்க நாட்டின் சிகாகோவில், RGBSI நிறுவனத்துடன் 100 கோடி ரூபாய் முதலீட்டில் ஓசூரில் மேம்பட்ட மின்னணு மற்றும் டெலிமாடிக்ஸ் உற்பத்தி நிறுவனத்தை அமைப்பதற்கான புரிந்து ணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப் பட்டது.

உற்பத்தி மற்றும் உட்கட்டமைப்பு வளர்ச்சி யில் அதிகமான தனியார் மற்றும் பொதுத்துறை முதலீட்டை ஈர்த்து, தமிழ்நாட்டின் அனைத்து பகுதிகளிலும் தொழில் துறை வளர்ச்சியை தமிழ்நாடு அரசு ஏற்படுத்தி வருகிறது. சீரான மற்றும் பரவலான வளர்ச்சி என்ற கோட்பாட்டை கடைப்பிடித்து வருவதன் காரணமாக உயர்கல்வி யில் மொத்த சேர்க்கையில் நாட்டிலேயே அதிகபட்ச விகிதத்தை அடைந்தும், பன்முகத்திறன் கொண்ட சிறப்பான மனிதவளத்தை உருவாக்கியும், நாட்டின் மிகப்பெரிய உற்பத்தி தளமாகவும், அறிவுசார் பொருளாதாரமாகவும் தமிழ்நாடு விளங்குகிறது.

முதலீடுகளை பெருமளவில் ஈர்த்து, இலட்சக்கணக்கான தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பினை வழங்கிடவும், மாநில பொருளாதாரத்தை மேலும் வலுவடையச் செய்திடவும், 2030 ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டினை 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக உயர்த்தும் இலக்கை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நிர்ணயித்து, அதனை அடைய பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரம் என்ற இலக்கை அடைவதற்கு உற்பத்தி மற்றும் சேவைத் துறைகளில் பெருமளவு முதலீடுகளை ஈர்த்திட வேண்டும். அதேபோல அதிக அளவில் வேலை வாய்ப்பினை வழங்கக் கூடிய தொழில்நுட்பம் மற்றும் மூலதன தீவிர துறைகளிலும் சமச்சீரான முதலீடுகளை ஈர்ப்பது மிகவும் இன்றியமையாதது ஆகும்.

இதனைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாட்டிற்கு அதிக அளவிலான தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக முதலமைச்சர் அவர்கள் அமெரிக்காவில் அரசு முறை பயணம் மேற்கொண்டு வருகிறார். இப்பயணத்தின் போது, முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் அமெரிக்க நாட்டின் சான் பிரான்சிஸ்கோ மற்றும் சிகாகோவில் உலகின் 17 முன்னணி நிறுவனங்களுடன் 7516 கோடி ரூபாய் முதலீட்டிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டதோடு, உலகளவில் பல்வேறு முன்னணி நிறுவனங்களின் உயர்அலுவலர்களை சந்தித்து தமிழ்நாட்டில் புதிய தொழில் முதலீடுகளை மேற்கொள்ள அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அதன் தொடர்ச்சியாக 12.9.2024 அன்று சிகாகோவில், RGBSI நிறுவனத்துடன் முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

அதன் விவரம் வருமாறு:

Rapid Global Business Solutions, Inc. (RGBSI) நிறுவனம் RGBSI நிறுவனம், பல்வேறு தொழில் நிறுவனங்களுக்கு பணியாளர் மேலாண்மை, பொறியியல், தரமான வாழ்க்கைச் சுழற்சி மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்ப தீர்வுகளை யும், பல துறைகளுக்கான மேம்பட்ட மின்னணு மற்றும் தொழில்நுட்ப தீர்வுகளையும் வழங்கும் நிறுவனமாகும். இந்நிறுவனத்தின் கார்ப்பரேட் தலைமையகம் அமெரிக்க நாட்டின், மிக்சிகனில் உள்ள ட்ராயில் அமைந்துள்ளது.

**புரிந்துணர்வு ஒப்பந்தம்**

முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் RGBSI நிறுவனத்திற்கும் தமிழ்நாடு அரசிற்கும் இடையே 100 கோடி ரூபாய் முதலீட்டில் ஓசூரில் மேம்பட்ட மின்னணு மற்றும் டெலிமாடிக்ஸ் உற்பத்தி நிறுவனத்தை அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப் பட்டது. இந்த புரிந்துணர்வு ஒப்பந்த நிகழ்வில், RGBSI நிறு வனத்தின் தலைவர் மற்றும் முதன்மை செயல் அலுவலர் டாக்டர் நானுவா சிங், தலைவர் மற்றும் முதன்மை அலுவலர் ரவிக் குமார் மற்றும் உயர் அலுவலர்கள் பங்கேற்றனர்.

இந்நிகழ்வின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி.அருண்ராய், தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் வே.விஷ்ணு, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.09.2024) பாரிஸில் நடைபெற்ற பாராலிம்பிக்ஸில் T63 பிரிவு உயரம் தாண்டுதலில் வெண்கல பதக்கம் பெற்ற மாரியப்பன் தங்கவேலுவிற்கு வாழ்த்துத் தெரிவித்து நினைவு பரிசு வழங்கினார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி மற்றும் பயிற்றுநர் சத்யநாராயணா உடனிருந்தனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.09.2024) சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்ற பாராட்டு நிகழ்ச்சியில், கடந்த ஆகஸ்ட் 31 மற்றும் செப்டம்பர் 1 ஆகிய நாட்களில் சென்னையில் நடைபெற்ற ஃபார்முலா 4 இந்தியன் சாம்பியன்ஷிப் மற்றும் இந்தியன் ரேசிங் லீக் (FORMULA 4 INDIAN CHAMPIONSHIP AND INDIAN RACING LEAQUE) கார் பந்தயத்தின் போது, பணியாற்றிய தூய்மைப் பணியாளர்களுடன் அமர்ந்து உணவருந்தினார். இந்நிகழ்ச்சியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ. வீ. மெய்யநாதன். பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, சென்னை பெருநகர காவல் ஆணையர் ஆ.அருண், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாதரெட்டி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.